ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1647/11 - 2010 අප්‍රේල් 01 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.04.01

*1647/11 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், மிஹிந்தலை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்சியின் உறுப்புரிமையை இழந்ததன் காரணமாக மிஹிந்தலை பிரதேச சபையின் உறுப்பினரொருவரது பதவி வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

ரங்கேகம கம்லத்தலாகே சுமித் நிஹால் என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் மிஹிந்தலை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின்கீழ் தகுதியுள்ள ஆளொருவராக, திரு. கிரிபண்டா சமரகோன் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது மிஹிந்தலை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர், எஸ். எம். சமன் பந்துலசேன ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. கிரிபண்டா சமரகோன் என்பவர், மிஹிந்தலை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். எம். சமன் பந்துலசேன,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மிஹிந்தலை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அநுராதபுரம்,
2010, மாச்சு 18.

4 - 464

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதன் காரணமாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரொருவரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

2007 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட 65அ (2) ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு அஹமது லெவ்வை மொஹமட் பாறுக் என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழான தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. அபூபக்கர் லெவ்வை அப்துல் லத்தீப் என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர், எம். எம். எஸ். கே. பண்டார மாபா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. அபூபக்கர் லெவ்வை அப்துல் லத்தீப் என்பவர், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எம். எம். எஸ். கே. பண்டார மாபா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
அட்டாளைச்சேனை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாறை,
2010, மாச்சு 22.

4 - 465

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், ரஜ்கம பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

அனுமதி பெற்றுக்கொள்ளாமல் மூன்று மாத காலமொன்றுக்கு சபையின் கூட்டங்களுக்குச் சமுகமளியாமை காரணமாக ரஜ்கம பிரதேச சபையின் உறுப்பினரொருவரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

கொம்பு சம்பத் த சில்வா எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் ரஜ்கம பிரதேச சபையின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழான தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு.தொம்மாதுர நுவன் ஹரீந்ர மென்டிஸ் என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது ரஜ்கம பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர், அந்தோனி பிமல் இந்திரஜித் த சில்வா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. தொம்மாதுர நுவன் ஹரீந்ர மெண்டிஸ் என்பவர், ரஜ்கம பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஏ. பி. ஐ. த சில்வா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
ரஜ்கம பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
காலி,
2010, மாச்சு 24.

4 - 466

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.